ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1470 - 2006 නොවැම්බර් 03 වැනි සිකුරාදා - 2006.11.03
1470 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1032 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1039 |


***கவனிக்க.***– (i) சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஒதுக்கீடு சட்டமூலம் 2006, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) இலங்கை மின்சார சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, நவெம்பர் 10 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 27 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல், பெண் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2006.06.30 ஆந் திகதியும் 1452 என்ற இலக்கமும் கொண்ட அரச வர்த்தமானியின் பிரகாரம் விண்ணப்பங்கள் அனுப்பும் திகதி 2006.09.22 ஆந் திகதியும் 1464 என்ற இலக்கமும் கொண்ட அரச வர்த்தமானியின் பிரசுரத்திற்கு அமைவாக, 2006.09.30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டது.

மேற்போந்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இப்போதும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, இறுதித் திகதி 2006.12.31 ஆகும்.

பொலிஸ் மாஅதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 1.

10 -168

---

## இலங்கைப் பாராளுமன்றம்

பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2006, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக, "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் இவ்விளம்பரம் www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்திலும் காணப்படுகின்றது.

**1. உதவி நூலகர் :**

1.1 *சம்பள அளவுத் திட்டம்.-* ஆண்டொன்றுக்கு ரூபா 1,72,620- 10 x 3,780/ 6 x 5,760 - ரூபா 2,44,980 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 27,754 ஆகும்). திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் உதவி நூலகர் ஒருவர் சிரேஷ்ட உதவி நூலகர் பதவிக்கு பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,95,300 - 5 x 3,780/3 x 5,760/5 x 8,580-ரூபா 2,74,380 என்ற சம்பள அளவுத்திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 33,309 ஆகும்.)

1.2 *வயது.-* 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (பாராளுமன்றச் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு இவ் உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.)

1.3 *கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :*

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பொதுப்பட்டத்துடன் இலங்கை நூலக சங்கத்தின் நூலக விஞ்ஞானம், ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் விஞ்ஞான இறுதிப் பரீட்சை அல்லது களணிப் பல்கலைக்கழகத்தின் நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகளில் தொழில்சார் உயர் சான்றிதழ் அல்லது சமனான தகைமைகள் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து நூலக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றிருத்தல் ;

அத்துடன்

(iii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து நூலகத் தன்னியக்கம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய கற்கை நெறியைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(iv) சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நல்ல தேர்ச்சி, நூலகத்தில் தமிழ் மொழியில் கடமை யாற்றும் ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1.4 *அனுபவம்.-* அங்கீகரிக்கப்பட்ட ஒரு நூலகத்தில் 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.5 *ஆட்சேர்ப்பு நடைமுறை.-* எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

**2. உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் :**

2.1 *தொழிலின் தன்மை :*

(i) ஆய்வு வேலைகளில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு உதவுதல் ;

(ii) தகவல்களை திரட்டுதலும் கணனி துணைத் தரவுகளைப் பேணுதலும் ;

(iii) விஷேட தலைப்புகளில் உண்மைத் தரவுகள், புள்ளிவிபரங்கள் போன்றவற்றைத் தொகுத்தல் ;

(iv) தேவையானபோதும் வேண்டப்படுகின்றவாறும் ஆய்வுசார் அளவீடுகள் மற்றும் ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொள்ளுதல்.

2.2 *சம்பள அளவுத் திட்டம்.*- ஆண்டொன்றிற்கு ரூபா 1,40,640–9 x 3,480/ 4 x 3,780 – ரூபா 1,87,080 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 23,074 ஆகும்). திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவர் சிரேஷ்ட உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,57,500–15 x 3,780–ரூபா 2,14,200 என்ற சம்பள அளவுத்திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 26,683 ஆகும்.)

2.3 *வயது.*– 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவை/ மாகாண அரச சேவை/ அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கான உயர் வயதெல்லை 40 ஆகும்.)

2.4 *கல்வித் தகைமைகள்.*– அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூக விஞ்ஞானத்தில் பட்டம். பின்வரும் விடயங்கள் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் விசேட பட்டம் அல்லது பொதுப்பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் :

(i) குடிமதிப்பியல் ;

(ii) சட்டம் ;

(iii) பொருளியல் ;

(iv) அரசியல் விஞ்ஞானம் ;

(v) புள்ளிவிபரவியல்.

2.5 *ஏனைய தகைமைகளும் அனுபவமும் :*

(i) சிங்கள/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நல்ல தேர்ச்சி ;

(ii) அரச/அரச ஆதரவு நிறுவனத்தில், தனியார் துறை நிறுவனத்தில் அல்லது ஆய்வு நிறுவனத்தில் ஆய்வு வேலைகளில் அனுபவம் ;

(iii) கணனிக் கல்வியறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

2.6 *ஆட்சேர்ப்பு நடைமுறை.*– எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

3. **பாராளுமன்ற உரை பெயர்ப்பாளர் :**

3.1 *சம்பள அளவுத் திட்டம்.*– ஆண்டொன்றுக்கு 1,72,620–10 x 3,780, 6 x 5,760 – 2,44,980 (இச்சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த ஊதியம் அண்ணளவாக ரூபா 27,754 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்தபின்னர் பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் ஒருவர் சிரேஷ்ட பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,95,300–5 x 3,780/3 x 5,760/5 x 8,580–ரூபா 2,74,380 என்ற சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக்குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 33,309 ஆகும்.)

3.2 *வயது.*–2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க/மாகாண அரச சேவை/அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் பதவி வகிப்பவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

3.3 *கல்வித் தகைமைகள்.*–

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்லைகலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்துள்ளதுடன் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமைச் சித்திகள் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

(iv) தேசிய க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமைச் சித்திகள் உட்பட எட்டிற்குக் குறையாத பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3.4 *அனுபவம்.*–கற்பித்தல், உரைபெயர்த்தல், மொழிபெயர்த்தல் அல்லது வெகுசனத் தொடர்பு போன்ற மொழிசார்ந்த துறைகளில் ஒன்றில் அனுபவம் பெற்றிருப்பதுடன் ஒரு மொழியிலிருந்து மற்றைய மொழிக்கு ஒரேவிதமாகச் சரளமாகவும் இலகுவாகவும் உரை பெயர்க்கும் திறமை பெற்றிருத்தலும் அவசியமாகும்.

(i) மேற்கூறப்பட்ட 3.3 (அ) இன்கீழ் விண்ணப்பம் செய்பவர்களுக்கு ஒரு (1) வருட அனுபவமும் ;

(ii) மேற்கூறப்பட்ட 3.3 (ஆ) இன்கீழ் விண்ணப்பம் செய்பவர்களுக்கு நான்கு (4) வருட அனுபவமும் ;

(iii) மேற்கூறப்பட்ட 3.3 (இ) அல்லது 3.3 (ஈ) இன்கீழ் விண்ணப்பம் செய்பவர்களுக்கு ஏழு (7) வருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

3.5 *ஆட்சேர்ப்பு நடைமுறை.*-உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம்.

4. **கைவேலைப் பணியாளர் :**

4.1 சம்பள அளவுத் திட்டம்.- ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760- 5 x 1,320/10 x 1,560/6 x 2,220- ரூபா 1,49,280 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,900 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் கைவேலைப் பணியாளர் ஒருவர் சிரேஷ்ட கைவேலைப் பணியாளர் பதவிக்குப் பதவியுயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,23,480 - 8 x 1,560/5 x 2,220/ 4 x 3,480 - ரூபா 1,60,980 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 20,800 ஆகும்.)

4.2 *வயது.*- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.3 *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

4.4 *தொழில்சார் தகைமைகள்.*- பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (இயந்திரவியல் அல்லது மின்னியல்)

4.5 *அனுபவம்.*- பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குறித்த துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

4.6 *ஆட்சேர்ப்பு நடைமுறை.*- தொழில்/எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

5. **மின்னியலாளர் :**

5.1 சம்பள அளவுத் திட்டம்.- ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9 x 1,320/10 x 1,560/3 x 2,220- ரூபா 1,42,620 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,000 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் மின்னியலாளர் ஒருவர் சிரேஷ்ட மின்னியலாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760 - 5 x 1,320/10 x 1,560/6 x 2,220 - ரூபா 1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.)

5.2 *வயது.*- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5.3 *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

5.4 *தொழில்சார் தகைமைகள்.*- தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியினால் மின்னியல் துறையில் நடத்தப்பட்ட இரண்டு வருடத்துக்குக் குறையாத முழுநேரப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

5.5 *அனுபவம்.*- பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குறித்த துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

5.6 *ஆட்சேர்ப்பு நடைமுறை.*- தொழில்/எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

6. **குழாய்த் தொகுதி சுத்திகரிப்பாளர் :**

6.1 சம்பள அளவுத் திட்டம்.- ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9 x 1,320/10 x 1,560/3 x 2,220- ரூபா 1,42,620 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,000 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் குழாய்த் தொகுதி சுத்திகரிப்பாளர் ஒருவர் சிரேஷ்ட குழாய்த் தொகுதி சுத்திகரிப்பாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760 - 5 x 1,320/10 x 1,560/ 6 x 2,220 - ரூபா 1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.)

6.2 *வயது.*- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6.3 *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

6.4 *தொழில்சார் தகைமைகள்.*- தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியினால் நடத்தப்படும் ஒரு வருட முழுநேர குழாய்த் தொகுதி சுத்திகரிப்பு தொடர்பான கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் ஒரு வருட முழு நேர குழாய்த் தொகுதி சுத்திகரிப்பு தொடர்பான கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

6.5 *அனுபவம்.*- பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குழாய் தொகுதி சுத்திகரிப்புடன் நீர்க்குழாய் பொருத்துதல் தொடர்பான துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

6.6 *ஆட்சேர்ப்பு நடைமுறை.*- தொழில்/எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

7. **வர்ணம் பூசுவோர் :**

7.1 *சம்பள அளவுத் திட்டம்.*- ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9 X 1,320/10 X 1,560/3 X 2,220- ரூபா 1,42,620 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,000 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் வர்ணம் பூசுவோர் ஒருவர் சிரேஷ்ட வர்ணம் பூசுவோர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760 - 5 X 1,320/10 X 1,560/6 X 2,220 - ரூபா 1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.)

7.2 *வயது.*- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7.3 *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

7.4 *தொழில்சார் தகைமைகள்.*- தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன் இணைக்கப்பட்ட பிரசித்த பெற்ற தொழில் பயிற்சி நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட முழு நேர வர்ணம் பூசுகை கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

7.5 *அனுபவம்.*- பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குறித்த துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

7.6 *ஆட்சேர்ப்பு முறை.*- தொழில்சார்/எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

8. **தச்சுத் தொழிலாளர்**

8.1 *சம்பள அளவுத் திட்டம்.*- ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9 X 1,320/10 X 1,560/3 X 2,220- ரூபா 1,42,620 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,000 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் தச்சுத் தொழிலாளர் ஒருவர் சிரேஷ்ட தச்சுத் தொழிலாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760 - 5 X 1,320/10 X 1,560/6 X 2,220 - ரூபா 1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.)

8.2 *வயது.*- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8.3 *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

8.4 *தொழில்சார் தகைமைகள்.*- தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் தச்சுத் தொழில் தொடர்பான ஒரு வருடகால முழுநேர கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் தச்சுத் தொழில் தொடர்பான ஒரு வருடகால முழுநேர கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

8.5 *அனுபவம்.*- பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குறித்த துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

8.6 *ஆட்சேர்ப்பு நடைமுறை.*- தொழில்சார்/எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

9. **நீர்க்குழாய் பொருத்துநர் :**

9.1 *சம்பள அளவுத் திட்டம்.*- ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9 X 1,320/10 X 1,560/3 X 2,220- ரூபா 1,42,620 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,000 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் நீர்க்குழாய் பொருத்துநர் ஒருவர் சிரேஷ்ட நீர்க்குழாய் பொருத்துநர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760 - 5 X 1,320/10 X 1,560/6 X 2,220 - ரூபா 1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.)

9.2 *வயது.*- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9.3 *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

9.4 *தொழில்சார் தகைமைகள்.*- தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் நீர்க்குழாய் பொருத்துதல் தொடர்பான ஒரு வருடகால முழுநேர கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் நீர்க்குழாய் பொருத்துதல் தொடர்பான ஒரு வருடகால முழுநேர கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

9.5 *அனுபவம்.*- பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குறித்த துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

9.6 *ஆட்சேர்ப்பு முறை.-* தொழில்சார்/எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

10. **மேசன்**

10.1 *சம்பளஅளவுத்திட்டம்.-* ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9X1,320/10X1,560/3 X 2,220- ரூபா 1,42,620. (இச்சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அனைத்துப்படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 18,000 ஆகும்) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் மேசன் ஒருவர் சிரேஷ்ட மேசன் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760- 5X1,320/10X1,560/6 X 2,220- ரூபா1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அனைத்துப்படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.

10.2 *வயது.-*2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

10.3 *கல்வித் தகைமைகள்.-* க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/ தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

10.4 *தொழில்சார் தகைமைகள்.-* தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் மேசன் தொடர்பான ஒரு வருடகால முழு நேர கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் மேசன் தொடர்பான ஒரு வருட கால முழு நேர கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

10.5 *அனுபவம்.-* பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் குறித்த துறையில் 03 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்

10.6 *ஆட்சேர்ப்பு நடைமுறை.-*தொழில்சார்/எழுத்துமூலப்பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

11. **தேர்ச்சிபெற்ற தொழிலாளர் (சிவில்) :**

11.1 *சம்பள அளவுத் திட்டம்.-* ஆண்டொன்றிற்கு ரூபா 99,180- 25 X 1,320- ரூபா 1,32,180 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 16,700 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் ஒருவர் சிரேஷ்ட தேர்ச்சிபெற்ற தொழிலாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480-9 X 1,320/10 X 1,560/3 X 2,220- ரூபா 1,42,620 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 18,400 ஆகும்.)

11.2 *வயது.-* 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

11.3 *கல்வித் தகைமைகள்.-* க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/ தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

11.4 *அனுபவம்.-* பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் தச்சுத் தொழில், மேசன், நீர்க்குழாய் பொருத்துதல், உலோக ஒட்டு வேலை ஆகிய துறைகளில் இரண்டு (02) வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

11.5 *ஆட்சேர்ப்பு நடைமுறை.-* தொழில்சார் / எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

12. **தேர்ச்சிபெற்ற தொழிலாளர் (மின்னியல்) :**

12.1 *சம்பள அளவுத் திட்டம்.-* ஆண்டொன்றிற்கு ரூபா 99,180- 25 X 1,320- ரூபா 1,32,180 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 16,700 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் (மின்னியியல்) ஒருவர் சிரேஷ்ட தேர்ச்சிபெற்ற தொழிலாளர் (மின்னியல்) பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480-9 X 1,320/ 10 X 1, 560/ 3 X 2,220- ரூபா 1,42,620 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 18,400 ஆகும்.)

12.2 *வயது.-* 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

12.3 *கல்வித் தகைமைகள்.-* க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/ தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

12.4 *அனுபவம்.-* பிரசித்திபெற்ற நிறுவனமொன்றில் மின்னியியல் துறைசார்ந்த வேலைகளில் இரண்டு (02) வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.

12.5 *ஆட்சேர்ப்பு நடைமுறை.-* தொழில்சார் / எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

13. **கணனி இயக்குநர் (தமிழ்):**

13.1 *பொறுப்புகள்.-* தரவுகளைப் பதிதல், பொதுவாகப் பயன்படுத்தப்படும் கணனிப் பிரயோகங்களைக் கையாளுதல் மற்றும் கணனிப் பாதுகாப்புப் பேணல் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்றவற்றிற்கு இவர் பொறுப்பாகவிருப்பார்.

13.2 *சம்பள அளவுத் திட்டம்.-*ஆண்டொன்றிற்கு ரூபா 1,23,480- 8 X 1,560/5 X 2,200/4 X 3,480- ரூபா 1,60,980 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 20,400 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் கணனி இயக்குநர் ஒருவர் சிரேஷ்ட கணனி இயக்குநர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,33,080-1 X 2,460/ 11 X 3,480- ரூபா 1,73,820 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத்

திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 23,300 ஆகும்.)

13.3 *வயது*.- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 20 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

13.4 *கல்வித் தகைமைகள்*.- க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் பழைய பாடத்திட்டமெனில் நான்கு பாடங்களிலும் புதிய பாடத்திட்டமெனில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந் திருப்பதுடன் தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபை அல்லது தொழிற்பயிற்சி அதிகார சபை அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றினால் நடாத்தப்படும் ஆறு மாதங்களுக்குக் குறையாத கணனிப் பிரயோகம் தொடர்பான சான்றிதழ் மட்ட கற்கைநெறியொன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல், தனியார் கணனிப் பயிற்சி நிறுவனங்களில் பொருத்தமான தகைமைகளைப் பெற்றவர்கள் இலங்கை கணனி செலுத்திச் சான்றிதழை (Sri Lanka Driving Licence) அல்லது சர்வதேச கணனி செலுத்திச் சான்றிதழை (International Computer Driving Licence Certificate) கொண்டிருத்தல் வேண்டும்.

13.5 *தொழில் அனுபவம்*.- மிக நவீன வலையமைப்புக்கள் கொண்ட கணனிச் சூழலில் ஆகக்குறைந்தது இரண்டு (02) வருடகால அனுபவத்தைப் பெற்றிருப்பதுடன் சொல் முறை வழிப்படுத்தல் (word processing), கணனிவழி வெளியீடு (desktop publishing), வரைவியல் பிரயோகம், (graphics applications) ஆகியவற்றில் சிறந்த அறிவைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

13.6 *ஏனைய திறன்கள்*.-மும்மொழிகளிலும் பணியாற்றும் திறன் சிறப்புத் தகுதியாகக் கருதப்படும்.

13.7 *ஆட்சேர்ப்பு நடைமுறை*.- தொழில்சார் / எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

14. **தளபாட மினுக்குநர் :**

14.1 *சம்பள அளவுத் திட்டம்*.- ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760- 5 X 1,320/10 X 1,560/6 X 2,220- ரூபா 1,49,280 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,900 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் தளபாட மினுக்குநர் ஒருவர் சிரேஷ்ட தளபாட மினுக்குநர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,23,480/8 X 1,560/5 X 2,220/4 X 3,480- ரூபா 1,60,980 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 20,800 ஆகும்.)

14.2 *வயது*.- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

14.3 *கல்வித் தகைமைகள்*.- 8 ஆம் தரம்

14.4 *அனுபவம்*.- அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தளபாடம் மினுக்குதலில் மூன்று (03) வருட அனுபவம்.

14.5 *ஆட்சேர்ப்பு நடைமுறை*.- தொழில்சார் / நடைமுறைப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

15. **வீடு பராமரிப்பு உதவியாளர் / பொருட்கள் பொறுப்பேற்றல் உதவியாளர் :**

15.1 *சம்பள அளவுத் திட்டம்*.- ஆண்டொன்றிற்கு ரூபா 99,180- 25 X 1,320- ரூபா 1,32,180 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 16,700 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பின்னர் வீடு பராமரிப்பு உதவியாளர் / பொருட்கள் பொறுப்பேற்றல் உதவியாளர் ஒருவர் சிரேஷ்ட வீடு பராமரிப்பு உதவியாளர் / பொருட்கள் பொறுப்பேற்றல் உதவியாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480-9 X 1,320/ 10 X 1,560/3 X 2,220- ரூபா 1,42,620 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 18,400 ஆகும்.)

15.2 *வயது*.- 2006, திசெம்பர் 01 ஆந் திகதியன்று 21 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

15.3 *கல்வித் தகைமைகள்*.- க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்களம்/தமிழ் மொழியில் திறமைச் சித்தி மற்றும் கணிதம்/ எண்கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

*அல்லது*

தே. க. பொ. த. பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ் மொழியில் திறமைச்சித்தி மற்றும் கணிதம்/ எண்கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகள் உட்பட எட்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

15.4 *அனுபவம்*.- வீடு பராமரிப்பு உதவியாளர்.- 2-5 நட்சத்திர அந்தஸ்துடைய ஹோட்டலொன்றில் அறை உதவியாளராக ஒரு வருடகால அனுபவம்.

பொருட்கள் பொறுப்பேற்றல் உதவியாளர்.- 2-5 நட்சத்திர அந்தஸ்துடைய ஹோட்டலொன்றில் பொருட்கள் பொறுப்பேற்றல் உதவியாளராக ஒரு வருடகால அனுபவம்.

15.5 *ஆட்சேர்ப்பு நடைமுறை*.- எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்காணல் பரீட்சை மூலம்.

16. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானது. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர்களாவர். நியமனமானது முதலில் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் இருக்கும். அரச சேவை/மாகாண அரச சேவையில் இருக்கும் நிரந்தரமான, தன்னுடைய நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு வருட காலத்திற்கு பதில் நியமன அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்குப் பொருத்தமான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு உட்படுவர்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பின்வருவன வற்றிற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்:-

(அ) மாதச் சம்பளத்தில் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு எட்டு வீதமும் (8%), அரசாங்கம் அவரின் சம்பளத்தில் பன்னிரெண்டு வீதத்திற்குச் (12%) சமமான தொகையை பங்களிப்புச் செய்யும்.

அல்லது

(ஆ) விதவை மற்றும் அனாதைகளுக்கான விதுரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறாக அவரின் சம்பளத்தின் குறிப்பிட்டதொரு வீதம் (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமான பதவியில் இருப்பவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.)

(iv) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதோடு நியமனம் செய்யப்படுவதற்கு முன்பதாக அவர்கள் தொடர்பான பாதுகாப்பு அறிக்கை பெறப்படும்.

17. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும். சான்றிதழ்களின் மூலப் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுமிடத்து அவற்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;

(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) விண்ணப்பதாரியின் நடத்தை தொடர்பாக அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில்/அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளை இணைக்கவேண்டிய தேவையில்லை.)

18. அரச சேவையில் /மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை உரிய திணைக்களங்களின்/நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

19. எவ்விதத்திலேனும் தமக்கு ஆதரவு தேட முனைதல் ஒரு தகைமையீனமாகும்.

20. விண்ணப்பத்தில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் எவையேனும் உண்மைக்குப் புறம்பானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும். அது நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கத்திற்கும் ஆளாவர். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்களும் திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைப்பின் நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப்படிவத்கேற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.
2006, நவெம்பர் 03.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

...................... பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-

திரு./திருமதி/செல்வி :-----.

(ஆ) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.

2. (அ) தனிப்பட்ட முகவரி :-----.

தொலைபேசி இல. :-----.

(ஆ) அலுவலக முகவரி :-----.

தொலைபேசி இல. :-----.

3. (அ) பிறந்த திகதி :----.

(பிறப்புச்சாட்சி பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) 2006.12.01 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

4. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :-----.

5. ஆணா/பெண்ணா? :-----.

6. இலங்கைப் பிரசையா? :-----.

7. தேசிய ஆளடையாள அட்டை இல. :-----.

8. கல்வித் தகைமைகள் :-

(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும்)

| சித்தியெய்திய பரீட்சைகளும் ஆண்டுகளும் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |

09. உயர்கல்வித் தகைமைகள் :-

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

(உதவி நூலகர், உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர், பாராளு மன்ற உரை பெயர்ப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர் களால் மட்டும் நிரப்பப்பட வேண்டும்.)

(i) பட்டமும் வருடமும் :-----.

(ii) பல்கலைக்கழகம் :-----.

10. தொழில்சார் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :-----.

11. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் :-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :-----.

(ஆ) தற்போது வகிக்கும் பதவி :-----.

(இ) நியமனத் திகதி :-----.

(ஈ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம் :-----.

(உ) மாதாந்த திரட்டிய சம்பளம் :-----.

(ஊ) மாதாந்தப் படிகள் :-----.

12. நீங்கள் ஏதேனும் குற்றச் செயலுக்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களாக ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக. :-----.

13. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்கப் பதவி வகித்துள்ளீர்களா? :-----.

அவ்வாறாயின் அவ்விபரங்களையும் சேவை முடிவுறுத் தப்பட்டமைக்கான காரணங்களையும் தருக. :-----.

14. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட்டுள்ளன.

**கவனிக்க.**- இச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) விண்ணப்பதாரியின் நடத்தை தொடர்பாக அண்மையில் பெறப்பட்ட இரண்டு சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரச சேவையில் /மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகளில் பணியாற்றி வருகின்ற விண்ணப்பதாரிகள் நடத்தை சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கத் தேவையில்லை.)

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கே தரப்பட்டிருக்கும் விபரங்கள் எவையேனும் உண்மைக்குப் புறம்பானவை அல்லது பிழையானவை என, நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், அது நியமனத்திற்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.....................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றுரை**

(அரச சேவையில்/மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத் தாபனங்களில் / நியதிச் சட்ட முறையான சபைகளில் சேவையி லீடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்,

இந்நிறுவனத்தில் ........................ ஆக பதவி வகிக்கும் திரு./திருமதி/ செல்வி ................. இன் விண்ணப்பப்பத்திரத்தை பரிந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன். அவரது நடத்தையும் வேலையும் திருப்திகரமானதென்பதையும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் கிடையாதென்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க இயலும்/ இயலாது.

..............................

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்,

(உத்தியோகபூர்வ இலச்சினை).

திகதி :-----.

11-152

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு - உயர் கல்விப் பிரிவு

பட்டப்படிப்பு புலமைப் பரிசில்கள் - 2007

2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள கல்வியாண்டிற்கென தகுதி பெற்ற இலங்கை மாணவர்களிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளில் புலமைப் பரிசில்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) ***அந்நாடுகளாவன-***

1. சீனா
2. இந்தியா

3. ரஷ்யா
4. பங்களாதேஷ்
5. பாகிஸ்தான்
6. கியூபா

(ஆ) **தேவையான பொதுத் தகுதிகள் :-**

(அ) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) வயதெல்லை ஒவ்வொரு புலமைப்பரிசில்களுக்குக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடியாகும் ;
(இ) விண்ணப்பிக்கும் துறை சம்பந்தப்பட்ட பாடங்களில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
(ஈ) ஆங்கில மொழி தொடர்பாக உயர் மட்ட தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.
(உ) நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.
(ஊ) விண்ணப்பதாரி அரசாங்க, கூட்டுத்தாபன, சபைகள் பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க உதவி பெறும் நிறுவனம் ஒன்றின் ஊழியராக இருக்கக் கூடாது.
(எ) விண்ணப்பதாரி தற்போதும் இலங்கையில் அல்லது வெளிநாட்டின் ஏதாவதொரு பல்கலைக்கழகமொன்றில் கற்கை நெறி ஒன்றினைத் தொடருபவராகவோ அலலது அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ இருக்கக் கூடாது.
(ஏ) சம்பந்தப்பட்ட நாட்டில் புலமைப்பரிசிலுக்கான அளிபபுக் கடிதம் கிடைக்கப் பெறும் வேளையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடப்பு அறிக்கைகளின்படி இந்நாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பாட நெறி ஒன்றினைத் தொடருவதற்கு பதிவு செய்து கொண்டுள்ள விண்ணபதாரி பெயர் குறித்தலுக்காகக் கவனத்திற் கொள்ளப்படமாட்டார்.

1. ***சீனா*** – உத்தேச பெயர் குறித்தல்கள் 10 ஆகும்.
:

1.1 ***தகுதிகளும் விண்ணப்பம் செய்வதற்கான நியதிகளும் :***

| கல்வித் துறைகள் | வயது | ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| (அ) பௌதிக விஞ்ஞானம் பொறியியல் துறை | 2007.09.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்கு குறைவாக இருத்தல். | க.பொ.த. (உ/த) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் ஒரே தடவையில் 02 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். |
| (ஆ) மருத்துவம் | 2007.09.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்கு குறைவாக இருத்தல். | க.பொ.த. (உ/த) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் ஒரே தடவையில் 02 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். |
| (இ) விவசாயம் | 2007.09.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்கு குறைவாக இருத்தல். | க.பொ.த. (உ/த) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் ஒரே தடவையில் 02 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். |
| (ஈ) பொருளியல் முகாமைத்துவம் வியாபாரம் | 2007.09.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்கு குறைவாக இருத்தல். | க.பொ.த. (உ/த) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் ஒரே தடவையில் 02 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். |
| (உ) சித்திரம் | 2007.09.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்கு குறைவாக இருத்தல். | க.பொ.த. (உ/த) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் ஒரே தடவையில் 02 திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். |

1.2 விஞ்ஞான பாடங்கள் மற்றும் பொருளியல் தொடர்பாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் முதல் வருடத்தில் சீன மொழிக்குப் புறம்பாக கணிதம், இரசாயனம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்க வேண்டியதோடு முதல் வருட இறுதியில் அப்பாடங்கள் தொடர்பாக நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடைந்ததன் பின்னர் தமது துறை சார்ந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கு இணைக்கப்படுவர்.

1.3 சித்திரப் பாடநெறியைக கற்க விரும்பும் மாணவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்திர பாடத்திற்கு "ஏ" சித்தியைப் பெற்றிருப்பதோடு நேர்முகப் பரீட்சையில் அவர்களது திறமை அவர்களால் சமர்ப்பிக்கப்படும் வர்ண படைப்புக்களைக் கொண்டே உறுதி செய்யப்படும்.

1.4 பெயர் குறிப்பதற்கென தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் சீன மொழியில் தமது பாடங்களைக் கற்க ஆயத்தமுடன் இருப்பதோடு சம்பந்தப்பட்ட பாடங்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் ஒரு வருட அல்லது இரு வருட காலங்களுக்குள் சீனமொழி தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1.5 ஆரம்பத்தில் தேர்தெடுக்கப்பட்ட கல்வித் துறையை எந்தவொரு காரணத்தினாலும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

1.6 ***அளிப்பு நியதிகள்.***- இப்புலமைப் பரிசில்கள் மூலம் பின்வரும் அனுகூலங்கள் பெற்றுத் தரப்படும் :-

(அ) மாதாந்த பராமரிப்புச் செலவு ;
(ஆ) அனுமதிக்கப்பட்ட பாடநெறி மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் ;
(இ) தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நூல்கள், உபகரணங்களுக்கான அளிப்பு ;
(ஈ) இலவச வைத்திய வசதிகள் ;
(உ) விடுதி வசதிகள் ;

சீனாவிற்குச் செல்வதற்கும் திரும்பி இலங்கைக்கு வருவதற்குமான பயணச் செலவினை விண்ணப்பதாரியே ஏற்க வேண்டும்.

2. **இந்தியா**.- உத்தேச பெயர் குறிப்பு எண்ணிக்கை 40 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **மருத்துவத் துறை தவிர்ந்த** ஏனைய அனைத்து துறைகளுக்கும் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் ஒரே தடவையில் சித்தி எய்தி இருக்க வேண்டும் :-

2.1***குறித்த பாடங்கள் கீழே குறிப்பிட்டவாறு அமையும் :-***

| | | |
|---|---|---|
| விவசாயமும் உயிரியல் விஞ்ஞானமும் | - | பௌதிகம், இரசாயனம், உயிரியல் |
| பொறியியல் விஞ்ஞானமும் பௌதிக விஞ்ஞானமும் | - | பௌதிகம், இரசாயனம் இணைந்த கணிதம் |
| வேறு கல்வித் துறைகள் | - | சம்பந்தப்பட்ட துறை சார்ந்த நான்கு அல்லது மூன்று பாடங்கள் (சித்திரம் வாணிபம் விஞ்ஞானம்) |

2.2 ***தேவைப்படும் குறைந்த பட்ச தகுதிகள் :***

(அ) வயது.- 2007.09.01 ஆந் திகதிக்கு 19-22 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடங்களில் 60% விகித முழுப் புள்ளியாவது பெற்றிருத்தல்.

(இ) கற்கை மொழி ஆங்கிலம் என்பதனால் க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஆங்கிலம் மொழிக்கு குறைந்தது திறமைச் சித்தியை பெற்றிருக்க வேண்டும்.

2.3***அளிப்பு நியதிகள் :***இப்புலமைப் பரிசில் பின்வரும் சலுகைகளைக் கொண்டிருக்கும் :-

(அ) சொந்த பராமரிப்புச் செலவு ;
(ஆ) அனுமதிக்கப்பட்ட கற்கை நெறி மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் ;
(இ) தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நூல்கள், உபகரணங்களுக்கான அளிப்பு ;
(ஈ) புலமைப் பரிசில் பெற்ற நாட்டினுள் அனுமதிக்கப்பட்ட கல்விச் சுற்றுலா செலவுகளுக்கான அளிப்பு ;
(உ) இந்தியாவிற்குச் செல்வதற்கும் மீள் இலங்கை திரும்புவதற்குமான விமான கட்டணங்கள் ;

விஞ்ஞான பாடங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இரசாயன கூட மற்றும் அது சார்ந்த செலவுகளை தாமே ஏற்க வேண்டும்.

3. **ரஷ்யா**- உத்தேச பெயர் குறிப்புக்கள் 10 ஆகும்.

3.1 ***கல்வித் துறைகள்.***- மருத்துவம், விவசாயம், பொறியியல, சட்டம், சர்வதேச உறவுகள், வியாபார மற்றும் பொருளியல் விஞ்ஞானம்.

3.2 ***தேவையான தகுதிகள் :***

*சகல விண்ணப்பதாரிகளும் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் 80% இற்குக் குறையாத முழு புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

*மருத்துவம் .- உயிரியல், இரசாயனம் போன்ற பாடங்களுக்கு "ஏ" அல்லது "பீ" சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.*

*பொறியியல் - இணைந்த கணிதம், பௌதிக விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு "ஏ" அல்லது "பீ" சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.*

*பொருளியல் முகாமைத்துவம் - கணிதம் அல்லது பொருளியல் போன்ற பாடங்களுக்கு "ஏ" அல்லது "பீ" சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.*

*இக்கற்கை நெறிக்கான வயதெல்லை 2007.01.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.*

3.3 ***அளிப்பு நியதிகள்.***- *புலமைப்பரிசிலின் கீழ் கல்வி இலவசமாக வழங்கப்படும்.*

***கீழ் குறிப்பிட்ட செலவுகளை மாணவரே ஏற்க வேண்டும். அண்ணளவான இலங்கை ரூபா 500,000 வரையாகும்.***

*(அ) விடுதி வசதிகளுக்காக சுதேச மாணவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படையிலான கட்டணங்கள் ;*

*(ஆ) மாதமொன்றிற்கு செலவாகும் அவசர செலவுகள் ;*
*(இ) ரஷ்ய பெடரல் சட்டத்திற்கமைவான வைத்திய செலவுகள் (வருடத்திற்கு 200 அமெரிக்க டொலர்கள்) ;*
*(ஈ) ரஷ்யாவிற்கு செல்வதற்கும் மீண்டும் இலங்கைக்கு வருவதற்குமான பிரயாணச் செலவுகள் ;*
*(உ) உணவு மற்றும் உடு துணிகளுக்கான செலவு (அண்ணளவாக 150 அமெரிக்க டொலர்கள்) ;*
*(ஊ) நாட்டிற்குள் மேற்கொள்ளப்படும் பிரயாணச் செலவுகள் (குறைந்தது 150 அமெரிக்க டொலர்கள்) ;*

*தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ரஷ்ய மொழியில் பாடநெறியைத் தொடர ஆயத்தமாக இருக்க வேண்டும்.*
*முதல் வருடத்தில் ரஷ்ய மொழி தொடர்பான அறிவு பெற்றுக் கொடுக்கப்படும்.*

4. **பங்களாதேஷ் :**- *உத்தேச பெயர் குறிப்புகள் 07 ஆகும்.*

4.1 ***கற்கைத் துறை.***- *மருத்துவம்*
4.2 ***ஆகக் குறைந்த கல்வித் தகைமை.***-*விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர் தரத்தில் பௌதிகம், இரசாயனம், உயிரியல் போன்ற பாடங்களில் பொதுவான முழுப் புள்ளிகளின் அளவு 65% இனைப் பெற்றிருக்க வேண்டும்.*

*க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளை முறையே 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரல்லாது சித்தியடைந்திருக்க வேண்டும்.*

4.3 ***வயது.***- *2007.05.31 ஆந் திகதிக்கு 17-22க்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.*

4.4 ***அளிப்பு நியதிகள்.***- *பாடநெறிகளுக்கான கட்டணங்கள் தவிர்ந்த சகலவித கட்டணங்களையும் விண்ணப்பதாரியே ஏற்க வேண்டும். இலங்கை நாணயத்தில் அண்ணளவாக ரூபா 9,000 வரை செலவாகும்.*

5. **பாகிஸ்தான்** *(தொழில்நுட்ப உதவி வேலைத்திட்டம்)- உத்தேச பெயர் குறித்தல்கள் 06 ஆகும் :*

5.1 ***கற்கைத் துறைகள்.***- *மருத்துவம், பல் வைத்தியம், மருந்தாளர், பொறியியல்*

5.2 ***ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் :***

*மருத்துவம் - க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் பௌதிகம், இரசாயனம், உயிரியல் போன்ற பாடங்களில் ஆகக் குறைந்தது 70% பொதுவான புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

*பல் வைத்தியம் மருந்தாளர் .- க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் பௌதிகம், இரசாயனம், உயிரியல் போன்ற பாடங்களில் ஆகக் குறைந்தது 60% பொதுவான புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

*பொறியியல் (விஞ்ஞானப் பட்டம்).- க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் பௌதிகம், இரசாயனம், உயிரியல் போன்ற பாடங்களில் ஆகக் குறைந்தது 60% பொதுவான புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

***குறிப்பு***.- பாகிஸ்தானின் Dow University of Medical & Health Science மற்றும் Sindh Medical College நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழி தொடர்பான IELTS மற்றும் TOFFEL பரீட்சைகளுக்குத் தோற்றி ஆகக் குறைந்தது 500 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

5.3 ***அளிப்பு நியதிகள் :***

தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் பாகிஸ்தான் மாணவர்கள் செலுத்தும் அடிப்படையிலான பாடநெறிக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும். சகல பிரயாணச் செலவுகள் உணவு மற்றும் விடுதிக் கட்டணங்கள் என்பவற்றை மாணவரே ஏற்க வேண்டும். இலங்கை நாயணயத்தில் அண்ணளவாக ரூபா 15,000 வரையிலாகும்.

6. ***கியூபா*** : உத்தேச பெயர் குறித்தல்கள் 06 ஆகும்.

6.1 ***கல்வித் துறைகள்***.- மருத்துவம், பொறியியல் தகவல் தொழில்நுட்பம் விளையாட்டு (Physical Sports)
***கற்கை மொழி***.- ஸ்பானிய மொழி

6.2 ***ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் :***

(அ) 2007.01.01 ஆந் திகதிக்கு 25 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.
(ஆ) விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
(இ) கல்வித் துறை தொடர்பான பாடங்களில் க. பொ. த. (உயர்தர)த்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

6.3 ***அளிப்பு நியதிகள்*** :

பாடநெறிக் கட்டணங்கள் விடுதி வசதிகள் நாளாந்த 03 உணவு வேளைகள் என்பன வழங்கப்படுவதோடு மேலதிக செலவுகள் மற்றும் கியூபா செல்வதற்கும் மீள இலங்கை வருவதற்குமான செலவுகளை மாணவரே ஏற்க வேண்டும். கியூபா அரசினால் மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் 80 பெசோக்கள் வழங்கப்படும்.

7. ***விண்ணப்பங்கள் :***

(i) சகல விண்ணப்பங்களும் இங்கு காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் ஏ 4 தாளில் மட்டுமே தயாரித்து அனுப்பப்படல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு நாட்டிற்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் வெவ்வேறான உறைகளில் இடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். ஒரு நாட்டிற்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பலாம். தமது விருப்புத் தெரிவின்படி இறங்கு வரிசையில் கல்வித் துறைகளை விண்ணப்பத்தின் குறிப்பிட்ட இடத்தில் குறிக்க வேண்டும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றிய தடவைகளுக்கொப்ப க.பொ.த. (உயர்தர) பெறுபேறுகளை விண்ணப்பத்தில் வெவ்வேறாக குறிக்க வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய வருடங்கள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பெற்ற "Z Score" மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக் கொண்ட தரங்கள் என்பவற்றை விண்ணப்பத்தில் சரியான இடத்தில் குறிப்பிட வேண்டும். இதற்கான எழுத்துமூல சான்றுகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரத்துடனும் மீளளிக்கப்படாத ரூபா 10 இற்கான முத்திரை இணைக்கப்படல் வேண்டும். இம்முத்திரை அல்லது முத்திரைகள் விண்ணப்பப் படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கூண்டில் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரி அதன் மேல் தனது கையொபபத்தினைத இட்டு அவற்றை செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

(vi) ***விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி***.- சகல புலமைப்பரிசில்களுக்குமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி ***2006.11.24 ஆந் திகதி ஆகும்***.

(vii) விண்ணப்பப்படிவம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில் புலமைப் பரிசில் கேட்கும் நாட்டின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(viii) விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் மட்டும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு பற்றுச்சீட்டு எதுவும் வழங்கப்படமாட்டாது.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
உயர் கல்வி அமைச்சு,
இல. 18, வோட் இடம்,
கொழும்பு 07.

(ix) சரியான முறையிலல்லாது வேறு முறைகளில் அனுப்பப்படும் அல்லது சரியான முறையில் நிரப்பப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **விசேட விடயங்கள் :**

1. இந்த வர்த்தமானி அறிவித்தலின் நிபந்தனைகள் முன்னறிவிப்பு எதுவுமின்றி புலமைப் பரிசில் வழங்கும் நாட்டின் விருப்பத்தின் பேரில் மாற்றம் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பெயர் குறித்தலின் பின்னர் புலமைப் பரிசிலை நிராகரிப்பாரெனில் வேறெந்த புலமைப் பரிசில் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி எதிர்காலத்தில் கவனத்திற் கொள்ளப்படமாட்டார்.

9. **ஒப்பந்தம்**.- தேர்ந்தெடுக்கப்படும் சகலரும் இலங்கை அரசுடன் கீழே காணப்படும் விடயங்கள் தொடர்பாக உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும்.

(அ) குறித்த பாடநெறியை சுறுசுறுப்பாகப் பயின்று நல்ல முறையில் பூர்த்தி செய்து மீண்டும் நாட்டிற்குத் திரும்பவும்,

(ஆ) பாடநெறி கற்று முடிந்ததும் தேவையேற்படின் இலங்கை அரசினால் நியமிக்கப்படும் குறித்தவொரு காலப் பகுதிக்கு இலங்கையினுள் இலங்கை அரசிற்குக் கீழ் பணிபுரியவும்.

(இ) தமது உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் சட்டங்களுக்கும் அமைவாக செயற்பட முடியாத சந்தர்ப்பங்களில் புலமைப் பரிசிலின் முழுமையான பெறுமதியை மீளச் செலுத்துவதற்கும் இலங்கை அரசிற்கு உடன்பட வேண்டும்.

10. **பெயர் குறித்தலும் தேர்ந்தெடுத்தலும்**.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் க. பொ.த. (உயர் தர) பரீட்சையின் பெறுபேறுகளில் அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் குறும் பட்டியல் இடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் பெயர்குறிப்பு, கடைசித் தேர்விற்காக கல்வி அமைச்சின் மூலம் அந்தந்த நாடுகளின் தூதுவர்கள், தூதுவராலயங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இதன்படி கடைசித் தேர்வானது புலமைப் பரிசில் வழங்கும் நாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பெயர் குறித்தல் தொடர்பாக கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக கீழே காணப்படும் துறைகள் தொடர்பான திறமைகளும் நேர்முகப் பரீட்சையின் போது மதிப்பீடு செய்யப்படும் :-

| | |
|---|---|
| விளையாட்டு செயற்பாடுகள்<br>கலாசார இலக்கிய செயற்பாடுகள்<br>ஏனைய சமூகவியல் செயற்பாடுகள் | தேசிய மற்றும் சர்வதேச மட்டம் |

ஆங்கில மற்றும் ஏனைய மொழிகள் தொடர்பான அறிவு
தலைமைத்துவமும் முன்வரும் ஆற்றல்கள்
புலமைப் பரிசில் வழங்கும் நாடு தொடர்பான பொது அறிவு.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
உயர் கல்வி பிரிவு,
18 வோட் இடம்,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| முத்திரைக் கூண்டு<br>(ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டவும்) |

| |
|---|
| நாடு<br>...................... |

**கல்வி அமைச்சு - உயர் கல்விப் பிரிவு**

*2007 ஆம் ஆண்டிற்கான பட்டப்படிப்பு புலமைப்பரிசில் விண்ணப்பம்*

01. முழுப் பெயர் : (சிங்களத்தில்/தமிழில்)
(வண./திரு./செல்வி) :-----.

முதலெழுத்துக்களுடன் பெயர் :-
(சிங்களத்தில்/தமிழில்) :

1.2 முழுப் பெயர் : வண./திரு. /செல்வி :----.
(ஆங்கிலத்தில்)
முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கிலத்தில்)

02. முகவரி :-
நிரந்தர முகவரி :-----.
(ஆங்கிலத்தில்)

தபால் முகவரி :-----.
(ஆங்கிலத்தில்)

தொலைபேசி இல./இலக்கங்கள் :-----. மாவட்டம் :------.
(அவசியமானது)
தேசிய அடையாள அட்டை இல. :-----.

03. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

04. பால் (பெண் -1 , ஆண் - 2 ) : [ ] (பொருத்தமான எண்ணை கூண்டினுள் எழுதவும்)

05. நீர் இலங்கைப் பிரசையா? :-----.

06. திருமணமானவரா/ திருமணமாகாதவரா? :-----.

07. பிறந்த இடம் :-----.

08. தாம் விரும்பும் பாடநெறி /கல்வித்துறை :-----.
(ஆங்கிலத்தில் இறங்கு வரிசையில் தரவும்)

09. விண்ணப்பதாரியின் குடும்பத்தில் வேறெவராவது பெற்றுள்ள புலமைப் பரிசில் தொடர்பான விபரம் (இருப்பின்) :

| தன்மை நாடு | அளிக்கப்பட்ட திகதி | விண்ணப்பதாரிக்கும் புலமைப் பரிசில் பெற்றவருக்கும் இடையே உள்ள உறவு முறை |
|---|---|---|
| ...................................... | ...................................... | ...................................................................... |

10. கல்வித் தகைமைகள் :-

(ஆங்கில மொழியில் நிரப்பவும்)

| பரீட்சையின் பெயர் | வருடமும் மாதமும் | பாடசாலை | சுட்டெண் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| க.பொ.த.(சா.த.) | | | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9.<br>10. | |
| க.பொ.த. (உ.த.) (பரீட்சைக்குத் தோற்றிய தடவைகயின்படி பெறு பேறுகளைத் தருக) | 1 ஆவது<br>2 ஆவது<br>3 ஆவது | | | 1.<br>2.<br>3.<br>4. | |
| பெற்ற முழுப் புள்ளிகள் /Z Score : | - முதற்றடவை :<br>- இரண்டாம் தடவை :<br>- மூன்றாம் தடவை : | | | | |

11. ஆங்கில மொழியில் சித்தியடைந்துள்ள ஆகக் கூடிய பரீட்சை :-----.

11.1 வருடம் : ------.

11.2 சித்தி/தரம் மற்றும் புள்ளி : ---------.

12. 1 நீர் தற்போது இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ ஏதாவதொரு பல்கலைக் கழகத்தில் பாடநெறி ஒன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட அல்லது கற்கும் ஒருவரா ? ஆம் எனில் பின்வரும் விபரங்களைத் தருக :-----.

(அ) பல்கலைக்கழகம் :----.

(ஆ) பாடநெறி :----.

(இ) பதிவு செய்துள்ளீரா ? :-----.

(ஈ) பதிவு செய்துள்ளீர் எனில் பதிவு எண் :----.

12. 1 நீர் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற விண்ணப்பித்துள்ளீரா ? :-----.

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை.

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும் தேவையான தகவல்கள் எதனையும் மறைக்கவில்லை எனவும் உறுதியளிக்கிறேன். என்னால் இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் தவறானவை என கண்டுபிடிக்குமிடத்து தேர்ந்தெடுக்கப்படு முன்னரெனில், நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், அளிப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் எனினும் தகுதியற்றவனாவேன் என்பதையும், அளிப்பினை நீக்கிவிட முடியும் என்பதனையும் நான் அறிந்து கொண்டுள்ளேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

11-97

### அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையின் II ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை–2006 (1)

2006.08.18 ஆந் திகதிய 1459 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சை அறிவித்தல் தொடர்பாக,

(2) மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சை அறிவித்தல் பந்தி 5.0 இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதி 2006, நவெம்பர் 08 ஆந் திகதி என திருத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006, ஒற்றோபர் 18.

11–131

---

### இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள்–2006

மேற்படி சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் 2006.12.20 ஆந் திகதி கொழும்பிலும் இன்னும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களிலும் நடாத்தப்படும்.

2. மேலும் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக்கு பரீட்சார்த்திகள் தோற்றும் வகையிலான கால அட்டவணைகளும் தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்.**– முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நிருவகிக்கின்ற பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் உரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு 'அ' இல் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. இன்னும் இலங்கை வெளிநாட்டு சேவை தொடர்பில் காணப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு 'ஆ' இல் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

அலுவலர்களின் விருப்பின் பேரில் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளின் பாடங்களுக்கு ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்ற அவர்கள் அனுமதிக்கப்படுவர். இரண்டாம் மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்களுக்கான வாய்மொழிப் பரீட்சைகளை ஒரேவிடத்தில் ஒரே நேரத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

4. இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான பாடங்கள் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் பின்வருமாறு அமைதல் வேண்டும் :

#### இலங்கை வெளிநாட்டு சேவை
#### 1 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| பகுதி I | | |
| 01 | நிதியியல் | 3 |
| 02 | இலங்கையின் வரலாறும் புவியியலும் | 3 |
| பகுதி II | | |
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 04 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 05 | சர்வதேச விவகாரங்கள் | 3 |
| 06 | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கு விதிகள் மற்றும் கணனி அறிவு | 3 |

#### வெளிநாட்டு மொழிகள்

| | | |
|---|---|---|
| 07 | அரபு மொழி | 2 |
| 08 | பிரஞ்சு மொழி | 2 |
| 09 | ரஷ்ய மொழி | 2 |
| 10 | ஸ்பானிய மொழி | 2 |
| 11 | ஹிந்தி மொழி | 2 |
| 12 | சீன மொழி | 2 |
| 13 | ஜேர்மனி மொழி | 2 |
| 14 | யப்பான் மொழி | 2 |
| 15 | ஆங்கில மொழி | 2 |

#### 2 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை

| பாட எண் | பாடம் | காலம் (மணித்தியாலம்) |
|---|---|---|
| பகுதி I | | |
| 21 | இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும் | 3 |
| 22 | நிருவாகம் | 3 |
| | (அ) அலுவலக முறைமை ஒழுங்கமைப்பு மற்றும் முறைகள் | |
| | (ஆ) தாபனக்கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II) | |

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| பகுதி II | | |
| 23 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 24 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 25 | சர்வதேச விவகாரம் | 3 |

5. இரண்டாம் மொழிகள் :

| | | |
|---|---|---|
| 30 | சிங்களம் (எழுத்துமூலம்) | |
| 31 | தமிழ் (எழுத்துமூலம்) | |
| 32 | ஆங்கிலம் (எழுத்துமூலம்) | |
| 33 | சிங்களம் (வாய்மொழி மூலம்) | 2 |
| 34 | தமிழ் (வாய்மொழி மூலம்) | |
| 35 | ஆங்கிலம் (வாய்மொழி மூலம்) | |

6. இவ்வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்களின் கவனம் கீழே மீள வெளியிடப்பட்டிருக்கும் 1996.09.04 ஆந் திகதிய 701 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்பால் ஈர்க்கப்படுகின்றது.

"திணைக்களப் பரீட்சை (பதவியுயர்வு மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை உட்பட) பதவியுயர்வுப் பரீட்சை இன்னும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆகியவற்றுக்கான மொழி மூலமான ஊழியர்கள் அரசாங்க சேவைக்கு உள்ளாகும் பொருட்டு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். மேலும் போட்டிப் பரீட்சையின்றி அடிப்படை ஆட்சேர்ப்பு நிகழ்ந்திருக்கும் பட்சத்தில் பதவியுயர்வு/ வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான மொழி மூலமானது அலுவலர் அரசாங்க சேவைக்கு உள்ளாக தகைமைபெற்ற அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும்".

7. பரீட்சார்த்திகள் வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் வகையில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களைத் தயாரிக்க பரீட்சைகள் ஆணையாளரினால் ஒழுங்குகள் மேற் கொள்ளப்படும்.

8. பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உரித்தற்ற மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

9. பரீட்சார்த்திகள் ஏ4 அளவான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இதனுள் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பங்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். இரு பரீட்சைகளுக்குமாகத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பரீட்சை தொடர்பிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

10. பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் விதிக்கின்ற நிபந்தனைகள், ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் ஒழுகி நடக்க வேண்டும்.

11. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, 2006.11.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கும் வண்ணம் இவ்வமைச்சின் வெளிநாட்டு நிருவாகப் பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். (வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் பணிபுரிபவர்கள் தமது விண்ணப்பங்களை தூதுவராலயத் தலைவர்களூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.) விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஏதேனும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

12. பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அவர் "பெலவத்தை, பத்தரமுல்லை, பரீட்சைத் திணைக்கள பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்" உடன் தாமதியாது தொடர்புகொள்ளுதல் வேண்டும். (தந்திகளை 'பரீட்சைகள்' பத்தரமுல்ல எனும் விலாசத்திற்கு) பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கவில்லை என அறிவித்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தகவல்களையும் வழங்க வேண்டும் :

(1) பரீட்சையின் பெயர் ;
(2) முழுப்பெயர் ;
(3) முழு அஞ்சல் முகவரி.

பரீட்சைத் திணைக்களத்திற்கு அண்மையில் வசிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்தின் "ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவுடன்" தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

13. அதனைத் தொடர்ந்து மேற்படி 12 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளை அனுசரிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் கடிதத் தொடர்புகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

14. பின்வரும் ஆவணங்கள் பரீட்சை நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருக்கும் :

(1) ஆட்கள் பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15. பின்வரும் அடிப்படையில் இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப் பட்டுள்ளது :-

(அ) முதலாவது அமர்வு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பாகத்திற்கு) கட்டணம் இலவசம்
(ஆ) அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அமர்வுக்கும்

| | ரூ. ச. |
|---|---|
| முழுப் பரீட்சைக்கும் | 115.00 |
| ஒரு பாடத்திற்கு | 70.00 |
| வாய்மொழிமூலப் பரீட்சை | 70.00 |

கட்டணங்கள் 4000-20-03-20-13 எனும் வருமானத் தலைப்பிற்கு செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டுக்களும் விண்ணப்பங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

ஏற்கனவே இப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் மேலே குறித்துக்காட்டப்பட்டவாறு உரிய கட்டணங்களைச் செலுத்தத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

எச். எம். ஜீ. எஸ். பளிஹக்கார,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2006, ஒற்றோபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு - இலங்கை**

(அலுவலக உபயோகத்திற்கு)

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை

1. (அ) (i) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :----. (சிங்களத்தில்/ தமிழில்)
   (ii) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :----. (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்துக்களில் கடைசிப் பெயருக்குப் பின்னால் முதலெழுத்துக்களை எழுதவும்.) உ-ம்.- Silva A. B.)

   (ஆ) (i) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் :----. (ஆங்கிலத்தில்/ தமிழில்)
   (ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் :----. (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. முகவரி :----. (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்கானது), (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. மொழி மூலம் :----.
   சிங்களம்- 2, தமிழ்- 3, ஆங்கிலம் -4

   (உரிய இலக்கத்தைக் கூண்டில் இடுக)

5. பால் :----.
   ஆண்-0, பெண்-1
   (உரிய இலக்கத்தைக் கூண்டில் இடுக.)

6. விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் :----.

| | |
|---|---|
| த. கா. 1 | 1 |
| த. கா. 2 | 2 |
| சிங்களம் (இரண்டாம் மொழி) | 3 |
| தமிழ் (இரண்டாம் மொழி) | 4 |
| ஆங்கிலம் (இரண்டாம் மொழி) | 5 |

(உரிய இலக்கத்தைக் கூண்டில் இடுக.)

7. இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனத் திகதி :----.
   திகதி :----. மாதம் :----. ஆண்டு :----.

8. அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள பாட எண்களைச் சுட்டிக்காட்டி தோற்றும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறித்துக்காட்டப்படாத பிற பாடங்களுக்குத் தோற்ற பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

| பாடம் | பாட எண் |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |
| (vi) | |

9. பிறந்த திகதி :----.
   திகதி :----. மாதம் :----. ஆண்டு :----.

10. பதவி :----.

11. பரீட்சார்த்தி முன்னர் முழுப் பரீட்சைக்கு அல்லது அதன் பாகத்திற்கு தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்பவற்றைக் குறிப்பிடுக.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிவதுடன் மேலே குறித்துக்காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்கு நான் தோற்றத் தகுதியுடையவனாகவுமுள்ளேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான ........................ ஆம் இலக்கப் பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்திய கட்டணம் (ரூபா) :----.

----,
விண்ணப்பதாரர் கையொப்பம்.

திகதி :----.

பற்றுச்சீட்டு மூலப்பிரதி இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
அனுப்புதல்,

மேலே கொடுக்கப்பட்ட தகவல்களையுடைய திரு./ திருமதி/ செல்வி ------ என்பவர் குறிப்பிட்டுள்ள இப்பரீட்சைக்கு அவர் தோற்றத் தகுதியுடையவர் என உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பதாரரான அவரது கையொப்பத்தையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

*பின்னிணைப்பு 'அ'*

**சிங்களம் :**

சிங்கள மொழியிலுள்ள பரீட்சை எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும் :

எழுத்துமூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களையும் உள்ளடக்கியதாக அமையும் :

(i) இலக்கணம் ;
(ii) வித்தியாசமான முறைகளில் எழுதப்பட்ட கிராம சேவகர்களிடமிருந்து வரும் அறிக்கைகள் அல்லது மனுக்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல் ;
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலகக் கடிதமொன்றை அல்லது ஆவணமொன்றை சிங்களத்திற்கு மொழிபெயர்த்தல்

வாய்மொழிமூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் :

(i) ஆங்கிலத்திலிருந்து அலுவலக விடயமொன்றை வாசிக்கும்போது சிங்களத்தில் எழுதுதல், அதாவது சிங்களம் பேசுமொருவர் அந்தப் பந்தியைக் கிரகித்துப் புரிந்து எழுதுதல் ;
(ii) சிங்களத்திலுள்ள மனுவொன்றை வாசித்தல் ;
(iii) *உரையாடலும் உரைபெயர்ப்பும்.-* இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் சிங்கள மொழியை பரீட்சார்த்திகள் புரிந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**தமிழ் :**

தமிழ் மொழியிலுள்ள பரீட்சை எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்துமூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களையும் உள்ளடக்கியதாக அமையும் :

(iv) இலக்கணம்
(v) வித்தியாசமான முறைகளில் எழுதப்பட்ட கிராம சேவகர்களிடமிருந்து வரும் அறிக்கைகள் அல்லது மனுக்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்
(vi) ஆங்கிலத்திலுள்ள அலுவலகக் கடிதமொன்றை அல்லது ஆவணமொன்றை தமிழுக்கு மொழிபெயர்த்தல்

வாய்மொழிமூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் :

(iv) ஆங்கிலத்திலிருந்து அலுவலக விடயமொன்றை வாசிக்கும்போது தமிழில் எழுதுதல், அதாவது தமிழ் பேசுமொருவர் அந்தப் பந்தியைக் கிரகித்துப் புரிந்து எழுதுதல் ;
(v) தமிழிலுள்ள மனுவொன்றை வாசித்தல் ;
(vi) *உரையாடலும் உரைபெயர்ப்பும்.-* இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் தமிழ் மொழியை பரீட்சார்த்திகள் புரிந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**ஆங்கிலம் :**

ஆங்கில வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாகவும் அமையும் :

(i) இலக்கணம்
(ii) கிரகித்தல்
(iii) சுருக்கமெழுதுதல்
(iv) அறிக்கை மற்றும் கடிதம் எழுதுதல்
(v) சொல்வளம்

பரீட்சார்த்திகளின் தகவல்களுக்காக வினாத்தாள்களின் மாதிரியொன்று கீழே தரப்படுகின்றது :

(a) Fill in the blanks with the correct form of the verb given within brackets :-

During the last war our country……….1(be) a British Colony………………….2(take) a full part in the war effort. Consequently our tea, rubber and coconut…………………..3(ship) to Britian at very favourable prices and the foreign exchange we…………. 4(earn) ………….5(accumlate) as assets. Again during the Korean war in the early fifties our products…………7 (not have) any exchange problem. However, political Independence………8(not given rise) to any effort to……..9(build up) our economy we…………10(be) a nation of consumers and we……….11 (Squander) our foreign exchange on consumer goods which ………12(can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we………..13(begin) to feel the pinch when our primary Products............. (14) (Fail) to command good prices in the world market while our requirements of food both rice and subsidiary food stuffs………….15(rise) in price.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary).

As Assistant Secretary……………..16 charge……….17 subjects, it was my duty to convene groups of officers dealing……… 18 different aspects of development work in the Ministry…………..19 time to time. They discussed………20 various problems that they confronted and which they could not cope…………21 on their own. We were thus able to share our experience……………22 each other and make concrete proposals………..23 the Secretary every month. He in turn put……………24 his own plans for discussion………….25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words.

26. Har……………ment(rass/as/ass).
27. Ember………..(rass/as/ass).
28. Tol……….(arreance/earnce/erence).
29. Par………..arian (liament/limen/liment).
30. Bal……….ing(let/lat/lot).
31. Itin……….(erary/arary/erarie).
32. Pers……..(everance/everence/ewerence).
33. Bour………….(geoise/joursie/juwarsy).
34. Prolet…………(ariet/ariat/eriyat).
35. Com………ate (memorr/emor/memor).

(d) In each of the following statements underline the correct work within brackets :-

36. The Inventory was checked by the Board of (Survellance/ Survey/Surveyours).

37. At the inquiry I had to be satisfied that the accused officer had (contradicted/contravened/contaminated) the regulations.

38. Every receipt should have a (counterfoil/counterfeit/counterpane) for the purpose of audit.

39. There was a possibility that the prosecution had (fabricated/fumigated/promulgate) the evidence.

40. (Discrete/Discretionary/Discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.

41. The Police Party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.

42. The entire staff turned upon (faciliate/infiltrate/felicitate) the watcher on his retirement.

43. In times of national crisis we must avoid (luxuriant/luxurious) habits.

44. Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/morals) of the people.

45. Candidates are advised to use (Stationary/Stationery) sparingly owing to the acute paper shortage.

(e) Underline the correct phrase in the brackets that means the same as the word or phrase underlined in each sentence :-

46. In good management the boss should, support his staff in their work (back out/back up/backaway).

47. The sales and replacement of stock amounted to over Rs. 5,000 (turn out/turn up/turn away).

48. We were warned at the start not to let out work get into arrears (set out/outset).

49. The younger son wasted his father's wealth in a few years (ran over/ran through).

50. I wanted to see the film, but the queue deterred me from going (put away/put off).

**Part B**

Read the following passage carefully and then answer the questions set out below :

Most modern political ideals such, for example, as justice, liberty, constitutional Government and respect for the law or at least the definitions of them, began with inflection of Greek thinkers upon the institutions of City State. But in the long history of political through the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City states was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern world, and the whole climate of opinion in which the work was done was different. Their problems though not without their analogies in the present, were never identical with modern problems, and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails, In order to understand at all accurately what their theories meant is necessary first to realize at least roughly what kind of institutions they had in view and what citizenship connected, as an effect and as an ideal, to the public for whom they wrote. For this purpose the Government of Athens is especially important, partly because it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an arrangement of a small territory dominated by a single City was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a thick (right mark) against the correct answer :-

51. Athens is significant for the students of Greek political thought mainly because :-

(a) it was the most powerful of the Greek City-State ;

(b) its ideals had been carefully studied by the Greeks themselves ;

(c) it had the most ideal form of Government ;

(d) it is the best known of the Greek City-state ;

52. Greek political thought was concerned with problems :-

(a) entirely unrelated to,
(b) identical with,
(c ) different from Analogous but to,

53. The moral and religious basis of Greek political idea is :-

(a) very similar to modern moral and religious ideas ;
(b) unknown ;
(c ) very different from modern moral and religious ideas.

54. It is :-

(a) easy,
(b) not at all easy,
(c) impossible,for a modern man to imagine what life was like in a Greek City-State,

55. In comparison with the ancient Greek City-states are :-

(a) very large,
(b) very small,
(c) about the same size.

56. The population of an ancient Greek city States was :-

(a) much less that 300,000
(b) over 3 million,
(c) just over 300,000.

57. The City-State of Athens comparisons :-

(a) a small territory governed by a singly city,
(b) a large territory governed by a number of cities,
(c) a small territory with village councils,
(c) a large territory with a decentralized administration.

58. At different time sin the history of the world people :-

(a) have thought in basically the same way,
(b) have thought in different ways,
(c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek Political thought :-

(a) because the Greek City States was very similar to modern states,
(b) in spite of Greek City States being very different from modern States,
(c ) because Modern political theorists are students of Greek Philosophy.

60. The meaning of political ideal at a particular moment in European History since the time of the Greeks can be defined only be :-

(a) relating it to its context,
(b) Tracing it back to its original meaning among the Greeks,
(c ) Investigating the meaning of the Greek word for it,
(d) taking into account only those features in it which have persisted though out its history.

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly :-

Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

EITHER

62. Write a letter to the Head of an Educational Institute in an English speaking country, setting out the following information in an orderly manner :-

(i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have not been consulted by the institution concerned in that country :

(ii) The G.C.E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an Ordinary Pass in London (Ordinary Level) :-

(iii) The receipt of the letter sent to the commissioner of Examination is acknownledged :

(iv) Any further information in this matter may be obtained from the Embassy of the Republic of General Sri Lanka in that country.

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hours clock in this country stating the advantages of such a measure.

பின்னிணைப்பு ஆ

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான
வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள்

1. முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை :

1.1 முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

1.2 பகுதி I-பின்வரும் பாடப்பரப்புகளிலான பரீட்சை ஒன்று :

(i) நிதியியல்.- நிதியியல் தொடர்பான பரீட்சை பின்வரும் விடயப் பரப்புக்கள் அடிப்படையில் அமையும் :

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்-பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக).
(ஆ) நடைமுறை ஆண்டு மதிப்பீடுகள், உ-ம்.- அவற்றின் ஒழுங்குகள், வருமானத் தலைப்பு கள், நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்.
(இ) கச்சேரிகளினுள் கையாளப்படும் குறித்த கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள்

(ii) இலங்கையின் வரலாறும் புவியியலும்.- இவ்வினாத்தாள் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும். அத்துடன் பரீட்சார்த்தி யொருவர் சித்தியடைய ஆகக்குறைந்தது 40% வீதமான புள்ளிகளையேனும் பெறத் தேவைப்படுத்தப் படுவார்.

1.3 பகுதி II-விசேட வினாத்தாள்

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி அறிவு

1.3.1 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தி யாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சார்த்திகள் சித்தியடைய ஆகக்குறைந்த 40% மான புள்ளிகளையேனும் பெறத் தேவைப்படுத்தப்படுவர்.

1.3.2 அலுவலர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனி யாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவன்/அவள் இப்பகுதியில் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ளபோது அத்தகைய பரீட்சார்த்தி சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**குறிப்பு**.- (i) சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புகளை உள்ளிட்டு இலங்கையின் அரசாங்கப் பாராளுமன்ற முறைமை மற்றும் அரசியலமைப்பு விருத்திப் பரிணாம வளர்ச்சி போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கும். சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் இன்னும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் மற்றும் உரிமைகள், தூதுவராலயச் சட்டம் மற்றும் சட்ட உடன்படிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்று விளங்கும் அலுவலர் ஒருவர், அவர் உரிய பரீட்சையில் அப்பாடங்களில் சித்தியொன்றைப் பெற்றுள்ளார் எனக் கருதி அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் எனும் வினாத்தாளுக்கு அவர் தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

2. இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை :

2.1 இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

2.2 பகுதி I-பின்வரும் பாடங்களிலான பரீட்சை ஒன்று :

(i) இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும்,
(ii) நிருவாகம்.- இவ்வினாத்தாள் பின்வரும் பரப்புகளை உள்ளடக்கியிருக்கும் :

(அ) அலுவலக முறைமைகளும் ஒழுங்கமைப்பும் முறைகளும்
(ஆ) தாபன விதிக்கோவை-தொகுதி I மற்றும் தொகுதி II

2.3 மேற்படி ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியா லங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் சித்தியடைய பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களிலும் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளையேனும் பெறத் தேவைப்படுத்தப் படுவர்.

2.4 வினாத்தாள் II-விசேட வினாத்தாள் :

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்

2.5 மேற்படி ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தி யாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் சித்தியடைய பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களிலும் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளையேனும் பெறத் தேவைப்படுத்தப்படுவர்.

2.6 அலுவலகர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவன்/அவள் இப்பகுதியில் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ளபோது அத்தகைய பரீட்சார்த்தி சித்தியடைந் துள்ளார் எனக் கருதப்படுவார்.

*தயவுசெய்து ஆங்கிலத்திலுள்ள விபரங்களைப் பார்க்க.

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

***முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.***

**அட்டவணை - 2006**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 03.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2006 |
| | | வெள்ளி | 10.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2006 |
| | | வெள்ளி | 17.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.11.2006 |
| | | வெள்ளி | 24.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2006 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 01.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2006 |
| | | வெள்ளி | 08.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2006 |
| | | வெள்ளி | 15.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2006 |
| | | வெள்ளி | 22.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2006 |
| | | வெள்ளி | 29.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2006 |

**அட்டவணை - 2007**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 05.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.12.2006 |
| | | வெள்ளி | 12.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.12.2006 |
| | | வெள்ளி | 19.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.01.2007 |
| | | வெள்ளி | 26.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.01.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.